# இறைத்தூதர்

# முஹம்மத் صلى الله عليه وسلم

# சுருக்கமான வரலாறு



Dr. எம்.எம்.அப்துல் காதிர் உமரீ

*வெளியீட்டு எண்: 10*

# இறைத்தூதர் முஹம்மத்

**ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்**

# வரலாறு

தொகுப்பாசிரியர்

மவ்லவீ. **Dr. M.M.** அப்துல் காதிர் உமரீ

(திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்)

வெளியீடு:

**IPRC**

**இஸ்லாமியப் பதிப்பகம்**
**மற்றும் ஆய்வு மையம்**

**ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

# இறைத்தூதர் முஹம்மத் அவர்களின் வரலாறு


பொருள் : முஹம்மத்(ஸல்) வரலாற்றுச் சுருக்கம்

தொகுப்பாசிரியர் : மவ்லவீ Dr. M.M. அப்துல் காதிர் உமரீ
Moulavi Dr. M.M. Abdul Kadir Umari

பக்கங்கள் : 32

பிரதிகள் : 2000

முதல் பதிப்பு : ஜுமாதுல் அவ்வல் 1442 - டிசம்பர் 2020

வடிவமைப்பு : ஸஃபா கிராஃபிக்ஸ், மதுரை-20.
9364414441.

வெளியீடு : இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்,
மதுரை-20. 9364414441.
மின்னஞ்சல்: iprcindia2000@gmail.com

**விலை : ரூபாய் 25/-**

***IRAITHOODAR MUHAMMAD***

▣ *Author: MOULAVI, DR. M.M. ABDUL KADIR UMARI*

▣ *First Edition: First Edition: J. Awwal 1442 Hijri - December 2020*

▣ *Copies 2000* ▣ *Publications: IPRC, Madurai - 20. Ph: +91-93644-14441*

*E-mail: iprcindia2000@gmail.com*

***Price: INR 25/-***



**© IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

*All rights reserved for IPRC and Author only. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission and written order from The Author or IPRC.*

*அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் அல்லாஹ்வின் பெயரால்...*

# பதிப்புரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*அன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...*

*இறையருளால் இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையத்தின் சார்பாய்* ***'இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் வரலாறு'*** *எனும் இச்சிற்றேடு வெளிவருதில் எமக்கு மிக்க மகிழ்ச்சி!*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் நீண்ட வரலாற்றை மிகமிகச் சுருக்கமாக திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் மவ்லவீ Dr. M.M. அப்துல் காதிர் உமரீ அவருக்கே உரிய எழுத்து நடையில் தொகுத்தளித்துள்ளார். இஸ்லாமிய வரலாற்றை அறிவதில் தோடக்க நிலையில் இருப்பவர்களுக்கும், ஒரு வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகப் படிக்க நினைப்பவர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறோம்.*

*குறிப்பாக முஸ்லிம் அல்லாத சகோதர சகோதரிகளுக்கு திருக்குர்ஆன் தமிழாக்கப் பகுதியை அன்பளிச் செய்பவர்கள் அதற்கு முன்னதாகவே இந்நூலை வாசிக்கச் செய்தால் இஸ்லாம் மற்றும் அதன் நோக்கம் குறித்தும் புரிநதுணர ஏதுவாய் இருக்கும். அந்த அடிப்படையில் இஸ்லாம் தெரியாதவர்களுக்கு அன்பளிப்புச் செய்ய வேண்டிய ஒரு நூலாய் இதைக் கருதுகிறோம்.*

*இந்நூலின் தொகுப்பாசிரியருக்கும், இதற்குத் துணை நின்ற அனைவருக்கும் எங்களின் நிறுவனம் நன்றியைத் தெரிவிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இப்பணிக்கு எங்களைத் தேர்வு செய்த வல்ல இறைவனுக்கு நன்றியினைத் தெரிவிக்கிறோம். இது போன்ற இன்னும் பல நல்ல ஆக்கங்கள் வெளிவரப் பிரார்த்திக்குமாறு வாசகர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.*

*அன்புடன்*
***Dr. சையது அலீ ஃபாத்திமா***
*நிறுவனர், இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்* ***(IPRC)***

*மதுரை*
*10.12.2020*

# முன்னுரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*அன்புடையீர்! தங்களின் கைகளில் தவழுகிற* **‘இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாறு’** *எனும் இச்சிற்றேடு முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். இச்சிற்றேடில் அவர்களின் வரலாற்றை முழுமையாக என்னால் எப்படித் தரமுடியும்? எனவே, அவர்களின் வரலாற்றில் சில பகுதிகளை இதில் நினைவு படுத்துகிறேன்.*

*சுயசரிதை (Auto biography), சரிதை (Biography) என வரலாற்று நூல்கள் சிலவற்றை நான் படித்துள்ளேன். ஆனால், நான் வியந்தது இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றைப் படித்த போதுதான். நான் ஒரு முஸ்லிம் என்பதால் இவ்வாறு பதிவு செய்ய வில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறு தொகுக்கப்பட்ட விதம் என்னை இவ்வாறு என்னைப் பதிவு செய்ய வைக்கிறது.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றைத் தொகுத்து அளிப்பதற்கு முன்பாக அவர்களின் தோழர்கள் முதற்கொண்டு அச்செய்தியை அறிவித்த கடைசி நபர்வரை பல இலட்சம் பேரின் வரலாறுகள் இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் வரரலாற்று ஆசிரியர்களால் சரிகாணப்பட்டது. அதாவது, அந்த நபர்களின் ஒழுக்கம், நேர்மை, நம்பகத் தன்மை, பாரம்பரியம் என பல்வேறு விஷயங்கள், பல்வேறு கோணங்களில் அலசி ஆராயப்பட்டப் பட்டது. அதன் பின்னர்தான் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறு, சிறிதளவும் ஒழிவு மறைவின்றி வெளிச்சத்தைப் போல வெளிப்படையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. உலகில் யாருடைய வரலாற்றையும் யாரும் இந்த அளவிற்கு நம்பகத் தன்மையுடன் தொகுத்தளிக்கவே இல்லை. எனவேதான், வியக்கிறேன்.*

*குடும்பம், சமூகம், அரசியல், ஆன்மிகம், தொழில், தேசத்தின் அதிபர் என எத்துறையை எடுத்தாலும், அத்துறைசார்ந்த அவர் களின் பங்கு உலகவாழ் மக்களுக்கு பெரும் முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருப்பதே வியப்பு.*

*இனம், மொழி, தேசம், மதம் என அனைத்தையும் கடந்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதில் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் வழிகாட்டியாய் அவர்கள் மிளிர்ந்துள்ளதே வியப்பு.*

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இப்பெரும் தூய வரலாற்றை மிகமிகச் சுருக்கமாகத் தொகுத்தளித்ததில் மகிழ்வினும், அவர்களின் முழுமையான வரலாற்றை தற்காலச் சூழலோடு ஒப்பிட்டு ஒரு தொகுப்பை வெளியிடுவதே மட்டற்ற மகிழ்ச்சியையும், திருப்தியையும் எனக்களிக்குமென்பதைப் பதிவு செய்கிறேன். குழப்பங்கள், சர்வதேச ஊழல்கள், மனிதகுல விரோதப்போக்கு, முதலாளித்துவம் போன்றவற்றின் கை ஓங்கி இருக்கும் இச்சூழலில் இப்படி ஒரு மகத்தான பணியைச் செய்வதற்கு எனக்கு இறைவன் வாய்ப்பை அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.*

*மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும்; ஒவ்வொருவருக்குமான உரிமைகள் முழுமையாக வழங்கப்பட வேண்டும்; ஒவ்வொருவரும் தம் கடமையுணர்ந்து பணியாற்ற வேண்டும்; நீதி நிலைத்திருக்க வேண்டும்; மனிதகுலத்திற்கெதிரான சூழ்ச்சிகள் வீழ்த்தப்பட வேண்டும்; வர்த்தகப் போர், பனிப்போர், போர் என ஏதுமின்றி உலக முழுக்க அமைதி நிலவவேண்டும். இப்படியொரு நிலை உருவாவதற்கு மிகச்சரியான கொள்கைக் கோட்பாடு, சட்டங்கள், வாழ்ந்து வழிகாட்டிய வரலாற்று முன்மாதிரி எங்கே உள்ளது என்பதை நியாய உணர்வோடு நாம் தேடக் கடமைப்பட்டுளோம். நாம் அறிந்தவரை உலக மக்களுக்கான வாழ்வியல் வழிகாட்டியாக திருக்குர்ஆன் மற்றும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை மட்டுமே திகழ்கிறது. இதற்கு மாற்றமாய் இதினும் சிறந்த வழிகாட்டுதல் இருக்கிறதென்பதை ஒருவர் நிரூபிக்கும் போது நாம் அதை ஏற்கத் தயாராகவே உள்ளோமென்பதை உளத்தூய்மையோடு தெரிவிக்கிறோம். காரணம் நமக்குத் தேவை, குற்றச்செயல்கள் மற்றும் பாவக்கறையின்றி உலகில் அமைதி நிலவேண்டும் என்பதே.*

*சீரிய சிந்தனையைத் தாமும் பெற்று பிறருக்கும் அளிக்குமாறு வாசக அன்பர்களைக் கோட்டுக் கொண்டு, இப்பணிக்கு வாய்ப்பை அளித்த வல்ல இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.*

*மதுரை* — *இறைப்பணியில் உங்கள் சகோதரன்*
*10.12.2020* — ***Dr. M.M. அப்துல் காதிர் உமரீ***
*திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்*

# பொருளடக்கம்...


| | |
|---|---|
| ஆரம்பகால வாழ்க்கை | 7 |
| உலகின் அன்றைய நிலை | 9 |
| தூதுத்துவம் | 9 |
| இறைவழிக்கு மக்களை அழைத்தல் | 10 |
| கடுமையான சோதனை | 13 |
| தாயிஃப் நகரத்து வீதியிலே | 13 |
| அன்றைய மதீனா | 14 |
| ஒப்பற்ற பந்தம் | 15 |
| மதீனாவில் இஸ்லாமிய அரசு | 16 |
| அடிப்படைச்சட்டம் | 16 |
| ஹுதய்பிய்யா உடன்படிக்கை | 18 |
| நிபந்தனைகள் | 18 |
| மன்னர்களுக்கு அழைப்பு | 19 |
| ஒப்பந்தம் முறிதல் | 19 |
| குடும்ப வாழ்க்கை | 20 |
| இறுதி நாள்கள்... | 23 |
| அரஃபா உரை | 23 |
| மரணம்... | 30 |


*******

# இறைத்தூதர் முஹம்மத்(ஸல்)[1] அவர்களின் சுருக்கமான வரலாறு

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் அனைவருக்கும் நேர்வழி காட்டுவதற்காக இறைவன் மனிதர்களிலிருந்தே தன் தூதர்களைத் தேர்ந் தெடுத்தான். இறைச்செய்தியின் இறுதி வடிவமான திருக்குர்ஆன் வழங்கப்பட்டு, இறைவனால் தேர்வு செய்யப் பட்டவரே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்).

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அரபு நாட்டில் உள்ள மக்காவில் கி.பி. 571-ல் பிறந்தார்கள். பிறப்பதற்கு முன்னரே தந்தையையும், தம் ஆறாவது வயதில் தாயையும் இழந்து அநாதை ஆனார்கள். எட்டு வயது வரை தம் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் பராமரிப்பிலும், பின்னர் சிறியதந்தை அபூ தாலிபின் பராமரிப்பிலும் வளர்ந்தார்கள்.

ஏக இறைவனை வணங்குவதற்கான உலகின் முதல் இறைஇல்லம் ‘கஅபா’ மக்காவில் உள்ளது.[2] இறைத்தூதர்கள் இப்ராஹீம் (அலை)[3] மற்றும் அவர்களின் மகன் இஸ்மாயீல்(அலை) சேர்ந்து அதன் கட்டடத்தை எழுப்பினார்கள். இந்த இறையில்லத்தைத் தரிசிப்ப தற்காக அரபுலகின் மக்கள் அனைவரும் புனிதப் பயணமாக வருவது வழக்கம். இதன் மூலம் அப்பகுதி உலகின் பெரும் வணிகத் தலமாய்த் திகழ்ந்தது. இஸ்மாயீல்(அலை) அவர்களின் சந்ததியில் பனூ ஹாஷிம் வம்சாவழியில் முஹம்மத் (ஸல்) பிறந்தார்கள்.

## ஆரம்பகால வாழ்க்கை

முஹம்மத்(ஸல்) ஆரம்ப காலத்தில் மக்கா பகுதியில் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இதனால் அவர்களுக்கு எழுத்தறிவுக்கும், படிப்பறிவுக்கும் வாய்ப்பில்லாமல்போனது. அவர்கள் பிற்காலத்தில் இறைச்செய்தியை மக்களிடம் பொறுமையுடன் சேர்ப்பதற்கான ஒரு பயிற்சிக் களமாய் ஆடுமேய்த்தல் இருந்தது.

---

1. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதன் சுருக்கம். இறைவனின் கருணையும் அமைதியும் அவர்கள் மீது உண்டாகட்டும் என பொருள். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்காக அவர்களின் ஏவல்படி இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும்.

2. காண்க திருக்குர்ஆன் 3:96.

3. (அலை) என்பது அலைஹிஸ்ஸலாம் என்னும் பிரார்த்தனையின் சுருக்கம். இறைத்தூதர்களின் பெயர் குறிப்பிட்டால் இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும். இதன் பொருள் அவர்களின் மீது அமைதி நிலவட்டுமாக என்பதாகும்

இளமைப் பருவத்தில் முஹம்மத்(ஸல்) தம் சிறிய தந்தை அபூ தாலிபுடனும், வேறு பலருடனும் சேர்ந்து வாணிபம் செய்தார்கள். இதில் அவர்களின் நாணயம், நேர்மை மற்றும் உண்மையில் நிலைத்திருக்கும் பண்பு வெளிப்பட்டது. இதனால் மக்கள் அவர்களை 'அல் அமீன்' (நம்பிக்கைக்கு உரியவர்), 'அஸ் ஸாதிக்' (உண்மையாளர்) என அழைத்தனர். அனைவராலும் விரும்பப் படுபவராக முஹம்மத்(ஸல்) திகழ்ந்தார்கள்.

அவர்களின் இளமைக் காலத்தில் ஒருமுறை கஅபா புணரமைப்புப் பணி நடந்தது. அப்போது ஹஜ்ருல் அஸ்வத் எனும் கருப்புக் கல்லை அந்த ஆலயத்தில் யார் பதிப்பது என்பதில் மக்காவாழ் வம்சாவழி மக்களிடையே பிரச்னை எழுந்தது. இறுதியாக மறுநாள் காலை இறைஇல்லத்திற்கு முதன்முதலாக வருபவரே இதில் தீர்ப்பளிக் கட்டும் என ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது. மறு நாள் காலை இறைஇல்லத்தில் அடியெடுத்து வைத்தவர் முஹம்மத்(ஸல்). இவரின் மீதுள்ள நம்பிக்கையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒரு போர்வையைக் கொண்டுவருமாறு முஹம்மத்(ஸல்) பணித் தார்கள். அப்போர்வையின் நடுவில் கல்லை தூக்கி வைத்து நான்கு வம்சா வழித்தலைவர்களையும் நான்கு முனையைப் பிடித்து தூக்கிவரச் செய்தார்கள். பின்னர் அக்கல்லை தம் கையால் உரிய இடத்தில் பதித்தார்கள். இதன் மூலம் பெரும் கலவரம் தடுக்கப்பட்டு அமைதி நிலவியது.

தம் இருபத்தி ஐந்தாம் வயதில் மக்காவின் பெரும் செல்வச் சீமாட்டி அன்னை கதீஜா(ரலி)[4] அவர்களை முஹம்மத்(ஸல்) மணந்தார்கள். கதீஜா(ரலி) ஏற்கனவே இரண்டு திருமணம் ஆன விதவைப்பெண் மணி. முஹம்மத்(ஸல்) அவர்களை விட பதினைந்து வயது மூத்தவர். இவர் மூலமாக முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இரண்டு ஆண் மற்றும் நான்கு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். ஆண் குழந்தைகள் இருவரும் குழந்தை பருவத்திலேயே இறந்துபோனார்கள். இதனால் அவர்களுக்குப் பின்பு உரிமை கொண்டாடும் ஆண் வாரிசு இல்லாமல் போனது.

---

4. ரலியல்லாஹு அன்ஹு அல்லது ரலியல்லாஹு அன்ஹா என்பதன் சுருக்கம். இறைவன் அவர்களைப் பொருந்திக் கொண்டான் என்பது இதன் பொருள்.

## உலகின் அன்றைய நிலை

உலகம் மூடநம்பிக்கையால் அன்று இருண்டிருந்தது. இறை விரோதப்போக்கும், உரிமைப் பறிப்பும் மேலோங்கியிருந்தது. நம் இந்தியாவில் பெண்களை உடன் கட்டை ஏற்றிவந்ததுபோல அன்றைய அரபியர்களும் தங்கள் பெண்குழந்தைகளை அவமானச் சின்னமாகக் கருதி உயிருடன் புதைத்து வந்தார்கள். அற்பமான பிரச்னைகளுக்கும்கூட பல ஆண்டுகள் போரிட்டு வந்தார்கள். மனித உயிர்கள் மதிக்கப்படவில்லை. இறைமறுப்பும், இறைவனுக்கு இணைவைப்பதுமே (துரோகம் இழைப்பதுமே) இவை அனைத்திற்கும் ஆணிவேராய் இருந்தது.

அந்த மக்களின் மூதாதையரான இப்ராஹீம் மற்றும் இஸ்மாயீல் (அலை) போதித்து வந்த ஓர் இறைக்கொள்கையை காலப்போக்கில் மக்கள் மாற்றிவிட்டார்கள். இதன் விளைவாக ஏக இறைவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட இறையில்லம் கஅபாவில் 360 சிலைகளை கடவுளர்களாக வைத்து வணங்கி வந்தார்கள். அவர்களில் முஹம்மத்(ஸல்) இம்மூடநம்பிக்கையை வெறுத்து தனிமையை நாடிச் சென்றார்கள்.

## தூதுத்துவம்

முஹம்மத்(ஸல்) மக்காவிற்கு அருகிலுள்ள 'ஹிரா' குகையில் அடிக்கடி தனிமையில் தங்கி வந்தார்கள். தம் நாற்பதாவது வயதில், 'ஹிரா' குகையில் தூதுத்துவப் பணிக்காக இறைவனால் தேர்வு செய்யப்பட்டார்கள்.

இறைவன் அனுப்பிய வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்களின் மூலம் முதன்முதலில் இறைவசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டன.

"படியுங்கள்" என வானவர் கூறினார்.

"நான் படிக்கத் தெரிந்தவன் இல்லையே!" என முஹம்மத் (ஸல்) கூறினார்கள்.

பின்னர் வானவர் அவர்களைச் சிரமப்படும் அளவிற்கு இறுகக் கட்டியணைத்து பின்னர் விட்டுவிட்டார். இவ்வாறே மும்முறை வானவர் செய்துவிட்டு,

"படைத்த உம் இரட்சகனின் பெயரால் படிப்பீராக.

'அலக்' எனும் (அட்டைப் பூச்சிபோல) தொங்கும் நிலையிலிருந்து

*மனிதனை அவன் படைத்தான்.*

*படிப்பீராக! உம் இரட்சகன் கண்ணியம் மிக்கவன்.*

*அவனே எழுது கோலால் கற்றுக்கொடுத்தான்.*

*மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்." (காண்க திருக்குர்ஆன் 96:1-5)*

*இதுதான் இறைச்செய்தியின் ஆரம்பம்.*

*தமக்குப் புதுமையான ஒரு சம்பவம் நிகழ்ந்ததால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அச்சத்துடன் தம் மனைவி கதீஜா(ரலி) அவர்களிடம் சென்று இச்செய்தியைச் சொன்னார்கள்.*

*"இறைவன் மீது ஆணையாக உங்களை இறைவன் இழிவுபடுத்தவே மாட்டான். (ஏனெனில்) நீங்கள் உறவினர்களுடன் இணங்கி இருக்கிறீர்கள்; சிரமப்படுவோரின் சுமைகளைச் சுமக்கிறீர்கள்; வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள்; விருந்தினர்களை உபசரிக் கிறீர்கள்; சோதனைகளுக்குட்பட்டோருக்கு உதவுகிறீர்கள்" என கதீஜா(ரலி) கூறினார்.*

*இருப்பினும் அவர்களின் அச்சத்தைப் போக்க தம் சிறிய தந்தையும், முந்தையும் வேதங்களில் ஞானம் பெற்றவருமான வரக்கா இப்னி நவ்ஃபல் என்பவரிடம் அழைத்துச் சென்றார். நடந்த நிகழ்வுகளைக் கேட்டறிந்த அவர், முஹம்மத்(ஸல்) இறைவனின் தூதராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதைத் தெளிவுபடுத்தினார். அதற்கான அறிவிப்புகள் முந்தைய வேதங்களில் காணப்படுவதாகச் சொன்னார். (காண்க ஸஹீஹ் அல் புகாரீ 3)*

## இறைவழிக்கு மக்களை அழைத்தல்

*பின்னர் சிறிது காலம் கழித்து மீண்டும் வானவர் மூலம் இறைவன் தன் செய்தியை அனுப்பினான்.*

*"போர்வை போர்த்திருப்பவரே!*

*எழுவீராக! (அச்சுறுத்தி) எச்சரிப்பீராக!*

*உம் இரட்சகனைப் பெருமைப்படுத்தவும் செய்வீராக...!" (காண்க: திருக்குர்ஆன் 74:1-3)*

*சிலைவணக்கத்திலிருந்த மக்களை இறைவழிக்கு அழைக்கப் பணித்த முதல் வசனங்கள் இவை.*

இதன் பின்னர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இறை வழியின்பால் தம் அழைப்புப் பணியைத் தொடங்கினார்கள். இதன் பயனாக அன்னை கதீஜா, அலீ, அபூ பக்ர், ஜைத்(ரலி) முதலியோர் இஸ்லாமிய அழைப்பை ஏற்று சிலைவணக்கத்திலிருந்து விடுபட்டார்கள்.

பின்னர் மக்களை இறைவழியின் பால் வெளிப்படையாக அழைக்குமாறு இறைவன் கட்டளையிட்டான்.

ஒருநாள் இறைத்தூதர்(ஸல்) 'ஸஃபா' என்னும் மலைக் குன்றின் மீது ஏறினார்கள்.

"உதவி! உதவி! அதிகாலை ஆபத்து!" எனக் கூவினார்கள்.

உடனே அவர்களை நோக்கி குறைஷியர் ஒன்றுகூடினர்.

"உங்களுக்கு என்ன (நேர்ந்தது)?" எனக் கேட்டார்கள்.

"எதிரிகள், காலையிலோ, மாலையிலோ உங்களைத் தாக்க வருகிறார்கள் என நான் அறிவித்தால் என்னை நம்புவீர்களா?" என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

"ஏனில்லை; (நம்புவோம்)" என மக்கள் கூறினார்கள்.

"ஒரு கடினமான தண்டனைக்கு முன்பு நான் உங்களை எச்சரிக்கிறேன்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

உடனே, "உனக்கு நாசம் உண்டாகட்டும். இதைச் சொல்லத்தான் எங்களை இங்கே ஒன்று கூட்டினாயா?" என இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூ லஹப் கேட்டான்...(காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 4801)

இதன் பின்னர் ஏகத்துவப் பிரச்சாரத்திற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது. உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என முஹம்மத் (ஸல்) அவர்களைப் புகழ்ந்த அதே மக்கள் இப்போது பைத்தியம், பொய்யர், சூனியக்காரர் என்றெல்லாம் வசைபாடத் தொடங்கினர். ஏகத்துவப்பிரச்சாரம் வலுப்பட்ட அதே வேளையில் எதிர்ப்பும் அதிகரித்தது. இருப்பினும் அவர்கள் அதைக் கண்டு கலங்கவில்லை. மூடத்தனமான வாழ்க்கைக்கு எதிரான தம் பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்கள்.

இவர் எழுதப்படிக்கத் தெரியாதவர்; ஆடு மேய்த்தவர்; அநாதை. ஆனால், இவர் ஓதும் வசனங்கள் அரபுலகின் இலக்கணத் தரத்தின் உச்சத்திலும், இலக்கியங்களை விஞ்சியதாகவும், முற்றிலும்

உண்மையாகவும் இருக்கிறதே என்பது அம்மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இறைவன் - அவன் ஒருவனே. இறைவன் (யாருடைய) தேவையும் அற்றவன். அவன் (பிள்ளையைப்) பெறவுமில்லை; (பிள்ளையாகப்) பெறப்படவுமில்லை. இன்னும், அவனுக்கு நிகராய் எவருமிலர் என (தூதரே) கூறும்! (காண்க: திருக்குர்ஆன் அத்தியாயம் 112)

இவ்வசனங்கள் மூன்று வரிகளில் இறைவனை தெளிவாக அறிமுகம் செய்கின்றன. ஏகத்துவத்தின் இச்சிந்தனைதான் அம்மக்கள் அனைவரையும் வியக்கச் செய்தது.

இத்தோடு நின்றுவிடாமல் மரணத்திற்குப் பிறகு உள்ள மனிதனின் வாழ்க்கைக் குறித்தும் கூறினார்கள். அவர்களை அது வியக்க வைத்தும் இறைத்தூதரைப் பரிகசித்தார்கள்.

இக்கொள்கையை பலர் எதிர்த்தபோதிலும் ஏற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. கொள்கையை ஏற்றவர்களில் எவரும் பின்வாங்கவில்லை. இவ்வாறு கொள்கையில் உறுதியாய் இருந்தவர்களை அம்மக்கள் பல்வேறு வகையில் கொடுமைப்படுத்தினார்கள். அன்றைய கருப்பு அடிமையாய் இருந்த பிலால், அம்மார், சுமய்யா(ரலி) முதலியோர் இஸ்லாமை ஏற்றுக்கொண்ட ஒரே காரணத்திற்காக அம்மக்களால் துன்புறுத்தப்பட்டார்கள். சிலரை கொலையும் செய்தார்கள். இருப்பினும் இஸ்லாமிய கொள்கை வீறுநடைபோட்டது.

அடுத்த கட்டமாக இப்பிரச்சாரத்தைத் தடுக்கும் யுக்தியில் இறை மறுப்பாளர்கள் இறைத்தூதருடன் சமரசம் செய்ய முனைந் தார்கள். அதற்கு, “என் வலக்கையில் சூரியனையும், இடக்கையில் நிலவையும் கொண்டுவந்து வைத்தாலும், என் கொள்கை வெற்றி பெறும் வரை அல்லது நான் மரணிக்கும் வரை இப்பிரச்சாரத்தைக் கைவிடமாட்டேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (காண்க: இப்னு ஹிஷாம்)

நபித்தோழர்களுக்கு இறைமறுப்பாளர்களால் அக்கிரமங்கள் அதிகரித்தன. இதனால் தம் தோழர்களை எத்தியோப்பியா அபீஸீனியாவிற்கு புலம்பெயர்ந்து செல்லுமாறு இறைத்தூதர் (ஸல்) பணித்தார்கள். அந்நாட்டு மன்னரால் பிரச்னை ஏதும் வராது என இறைத்தூதர்(ஸல்) கருதினார்கள். அவ்வாறே இருந்தது. ஆனால், முஸ்லிம்கள் அங்கு நிம்மதியாக வாழ்வதை இறைமறுப்

பாளர்களால் பொறுக்க முடியவில்லை. முஸ்லிம்களை அழித் தொழிக்கும் நோக்கில் அங்கும் சென்று அந்நாட்டு அரசரிடம் முறையிட்டார்கள். அரசரின் விசாரணைக்குப் பின்னர் இறைமறுப் பாளர்கள் தம் முயற்சியில் தோல்வியுற்றவர்களாய் மக்கா திரும்பினார்கள்.

## கடுமையான சோதனை

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) ஏகத்துவப் பிரச்சாரத்தைத் தொடங்கிய பத்தாவது ஆண்டில் பல சோதனைகளை எதிர் கொண்டார்கள். சமூகத்தால் ஊர்நீக்கம்; அவர்களுக்குப் பக்க பலமாய் இருந்த அவர்களின் சிறிய தந்தை அபூ தாலிப்பின் மரணம், மனைவி கதீஜா(ரலி) அவர்களின் மரணம் முதலிய சோதனைகள் நிகழ்ந்தன. வரலாற்றில் இந்த ஆண்டை 'சோதனை ஆண்டு' எனக் குறிப்பிடுகிறார்கள்.

## தாயிஃப் நகரத்து வீதியிலே

எவ்வளவோ சோதனைகளைத் தாங்கியும் மக்கள் இஸ்லாமை ஏற்கவில்லை என்பதால் இப்போது இறைத்தூதர்(ஸல்) தம் பிரச்சாரத்தை தமக்கு அண்டை நாடான தாயிஃப் பக்கம் திருப்பினார்கள். அம்மக்களோ அவர்களை கல்லால் அடித்துத் துன்புறுத்தினார்கள். அப்போது வானவர் ஜிப்ரீல்(அலை) அங்கே வந்தார்கள்.

"இந்த தேசத்தின் இருபக்கமும் உள்ள மலைகளை மோதச் செய்து அம்மக்களை அழித்துவிடவா?" என இறைத்தூதர்(ஸல்) அவர் களிடம் கேட்டார்கள்.

"வேண்டாம்! சத்தியத்தை இவர்கள் ஏற்காவிட்டாலும் இவர்களின் சந்ததிகள் ஏற்றுக்கொள்ளக் கூடும்" எனக் கூறினார்கள். (காண்க: இப்னு ஹிஷாம்)

இப்படிப்பட்ட சோதனைகள் மிகுந்த சூழலில் இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்கு 'மிஃராஜ்' எனும் விண்வெளிப் பயணம் நிகழ்ந்தது.

ஓர் இரவில் இறைவன் தம் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை மக்காவின் கஅபாவிலிருந்து ஜெருசலத்திலுள்ள 'மஸ்ஜிதுல் அக்ஸா' எனும் இறையில்லத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்து ஜிப்ரீல்(அலை) அவர்களின் மூலம் புராக் எனும் ஒரு வாகனத்தின் மூலம் விண்வெளிக்கு அழைத்துச் சென்றான்.

அங்கு பல நிகழ்வுகள் நிகழ்ந்தன. இறுதியாக ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. பின்னர் அவர்களை அவர்களின் இல்லத்திற்கு அதே இரவில் இறைவன் திருப்பினான். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 3393)

இந்நிகழ்வை இறைத்தூதர்(ஸல்) கூறியதும், இறைமறுப்பாளர்கள் மேலும் நகைக்க ஆரம்பித்தனர். நாளுக்கு நாள் எதிர்ப்பு அதிகரித்தது. இந்நிலையில் இறைவனின் அடுத்த கட்டளை வந்தது.

இறைத்தூதர்(ஸல்) மக்காவிலிருந்து சுமார் 250 மைல் தொலைவிலுள்ள மதீனாவிற்குப் புலம் பெயர்ந்தார்கள். இதற்கு ஹிஜ்ரா என்று பெயர். இஸ்லாமிய மறுமலர்ச்சியின் ஆண்டுக் கணக்கு (ஹிஜ்ரி) இதிலிருந்து துவங்குகிறது.

ஹிஜ்ரத்திற்கு முன்னதாகவே ஹஜ்ஜுக்கு வந்த மதீனாவின் ஒரு குழு இஸ்லாமை ஏற்றுக் கொண்டது. இறைத்தூதர்(ஸல்) அவர்களை மதீனாவிற்கும் அழைத்தது. அங்கு அவர்களை தம் மனைவி மக்களைவிட அதிக அக்கறையுடன் பாதுகாப்பதாகவும் வாக்களித்தது. இந்தக் குழு மதீனாவில் இஸ்லாமிய பிரச்சாரமும் செய்துவந்தது. இந்நிலையில்தான் இறைத்தூதர்(ஸல்) மதீனாவிற்குப் புலம்பெயர்ந்தார்கள். புலம்பெயர்ந்தவர்கள் ‘முஹாஜிர்கள்’, மதீனாவாழ் மக்கள் ‘அன்ஸாரிகள்’ என அழைக்கப்பட்டார்கள்.

## அன்றைய மதீனா

அன்று மதீனா ஒரு தனி தேசம். அங்கு ஓர் அரசு இல்லை; முறையான நிர்வாகமும் இல்லை. மக்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தார்கள். ‘அவ்ஸ்’ மற்றும் ‘கஸ்ரஜ்’ ஆகியவை மதீனாவின் பெரும் கோத்திரங்கள். இவர்கள் தவிர இவர்களைச் சார்ந்த பத்து பிரிவுகள் இருந்தன. அங்கு கிருத்தவர்களும் யூதர்களும் வாழ்ந்து வந்தார்கள். யூதர்கள் அந்நாட்டின் வந்தேறிகள். அவர்கள் மதீனாவின் பூர்வீக மக்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டிய சூழல் இருந்தது. அவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை மறுக்கப்பட்டிருந்தது. இத்தனை பிரிவுகளுக்குள் அடிக்கடி போர் மூழ்வது வழக்கமாய் இருந்தது. அப்போது,

“எங்களுக்காக இறைவனின் இறுதித்தூதர் ஒருவர் வருவார் அவரின் உதவியால் உங்களை நாங்கள் வெல்வோம்” என யூதர்கள் கூறுவதும் வழக்கமாய் இருந்தது. எங்களின் இறுதித்தூதர் மூலம்

நாங்கள் உங்களை வெல்வோம் என்ற இவர்களின் அச்சுறுத்தல் ஒருவகையில் மதீனாவாசிகளுக்கு இறைத்தூதரின் வருகையை முன்னறிவிப்புச் செய்துவிட்டது.

## ஒப்பற்ற பந்தம்

மதீனாவில் ஓர் ஒப்பற்ற பந்தம் ஏற்படுத்தப்பட்டது, முஹாஜிர் மற்றும் அன்ஸாரிகளுக்கு இடையிலான சகோதரத்துவ பந்தம் அது. இரண்டு வீடு வைத்திருந்த அன்ஸாரிகள் தம் முஹாஜிர் சகோதரர்களுக்கு ஒரு வீட்டையும், இரண்டு தோட்டங்கள் வைத்திருந்த அன்ஸாரிகள் முஹாஜிர் சகோதரருக்கு ஒரு தோட்டத்தையும் எனப் பிரித்துக் கொடுத்து முஹாஜிர்களுக்கு அன்ஸாரிகள் வாழ்வு அளித்தார்கள். இப்படி ஒரு பந்தம் வரலாற்றில் எங்கும் நிகழ்ந்ததில்லை. இதற்கு பல காரணங்கள் இருப்பினும், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மதீனா வருவதற்கு முன்பே அன்ஸாரிகள் அவர்களிடம் கொடுத்திருந்து பின்வரும் வாக்குறுதி மிக முக்கியக் காரணமாகும்.

மதீனாவாழ் அன்ஸார் முஸ்லிம் தோழர்களின் வேண்டுதலின் பேரில்தான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மதீனா வந்தார்கள். தங்களின் பெண்களையும், குழந்தைகளையும் காப்பது போன்று இறைத்தூதர்(ஸல்) அவர்களைக் காப்பதாக அவர்கள் வாக்களித் தார்கள். ‘அகபா’வில் உறுதிமொழி எடுத்தவர்களிடம், “கஜ்ரஜின் மக்களே! இவருக்கு ஆதரவை உறுதி அளிப்பதன் மூலம் நீங்கள் என்ன செய்கிறீர்கள் தெரியுமா? நீங்கள் அரபு மக்கள் அனை வருக்கும் எதிராகப் போரிடுகிறீர்கள். (பின்வரும் காலத்தில்) நீங்கள் உங்கள் உடைமையை இழந்தாலோ, உங்கள் பிரபுக்கள் கொல்லப்பட்டாலோ ஆதரவை விலக்கிக் கொள்வதாகயிருந்தால், அதை இப்போதே செய்துவிடுங்கள். இல்லையெனில் அது இவ்வுலகிலும் மறுமையிலும் உங்களைத் தலைகுனிய வைத்து அவமானப்படச் செய்துவிடும்.” என அல் அப்பாஸ் இப்னு உபாதா கூறினார்கள்.

இஸ்லாமைத் தழுவாதிருந்த நிலையிலும்கூட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பெரிய தந்தை அப்பாஸ்(ரலி) அம்மக்களிடம் கூறினார்கள். “அல் கஜ்ரஜைன் மக்களே! இறைத் தூதர் முஹம்மத்(ஸல்) நம்மிடையே வகிக்கும் அந்தஸ்தை நீங்கள் அறிவீர்கள். நாங்கள் எங்கள் மக்களிடமிருந்து அவரைக் காத்துள்ளோம். அவர் தம் மக்களிடம் மரியாதையுடனும், பாது

காப்புடனும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் உங்களிடம் திரும்பி உங்களைச் சேர்ந்தவராகிவிட்டார். அவருக்கு உண்மையாக இருந்து, கொடுத்த வாக்குறுதிப்படி எதிரிகளிடமிருந்து அவரைக் காப்பதாகயிருந்தால் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்; அல்லது உங்களுடன் வந்த பிறகு அவருக்குத் துரோகமிழைத்து அவரைக் கைவிடும் எண்ணமிருந்தால் இப்போதே அவரை விட்டுவிடுங்கள். ஏனெனில் அவர் எங்கிருப்பினும் பாதுகாப்பாகவே இருப்பார்" என்றும் அப்பாஸ்(ரலி) கூறினார்.

தாங்கள் அளித்திருந்த வாக்குறுதியில் அன்ஸாரிகள் மிகவும் உறுதியாய் இருந்து முஹாஜிர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார்கள்.

## மதீனாவில் இஸ்லாமிய அரசு

மதீனாவில் இஸ்லாமை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாத மதீனா வாழ் மக்களும், கிருத்தவர்களும், யூதர்களும் இறைத்தூதர்(ஸல்) அவர்களை நாட்டின் அதிபராய் ஏற்றுக் கொண்டார்கள். இதன் தலைமை பீடமாக மதீனாவின் இறையில்லம் - மஸ்ஜிதுன் னபவீ அமைந்தது. அப்போது இறைத் தூதர்(ஸல்) அரசியல் சாசனம் ஒன்றை முன்மொழிந்தார்கள். அது, பல்வேறு மொழி, இனம், குலம், தேசம், மதம் ஆகிய பிரிவினைகளைக் கடந்து உலக அமைதியையும், உலகளாவிய சகோதரத்துவத்தையும் வலியுறுத்துவதாய் இருந்தது. காரணம், அது இறைச்சட்டங்களின் படி முழுமையாய் அமைந்திருந்தது.

## அடிப்படைச்சட்டம்

இறைத்தூதர்(ஸல்) முன்மொழிந்த அச்சட்டம்,

- தேசத்தின் அமைதிக்கு உத்திரவாதம் அளித்தது.
- வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக தேசத்தின் பாதுகாப்புக்கு உறுதியளித்தது.
- ஒழுக்கக் கேடான, தீய காரியங்கள் அனைத்தும் தடை செய்யப் பட்டன. மனித உரிமைகள் பேணப்பட்டு நீதி நிலை நிறுத்தப் பட்டது.

இஸ்லாமிய வாழ்க்கை நெறி குறித்த இறைச்சட்டங்கள் மதீனாவில் முழுமையாக வழங்கப்பட்டன. இறைத்தூதர்(ஸல்) அந்த மக்களுக்கு அளித்த வாழ்க்கைநெறி அவர்களை முழுமையாக மாற்றியமைத்தது.

இப்படிப்பட்ட உலகின் மிகச்சிறந்த முன்மாதிரி மிக்க ஒரு சமுதாயத்தைத்தான் இறைமறுப்பாளர்கள் அழித்தொழிக்கத் துடித்தார்கள். மதீனாவில் இந்த முன்மாதிரியான சமுதாயத்தை இறைமறுப்பாளர்கள் நிம்மதியாக வாழவிடவில்லை. அவர்களின் மீது போர் தொடுத்தார்கள். அப்போது இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

மக்கா தேசத்தில் வாழ்ந்த இறைமறுப்பாளர்கள் மதீனாவில் வாழ்ந்து வந்த இறைநம்பிக்கையாளர்களையும் அந்த தேசத்தையும் அழிப்பதற்கு மாபெரும் படையுடன் போருக்காக புறப்பட்டு வந்தபோது இறைவன் பின்வரும் வசனத்தை அருளினான்

“போர் தொடுக்கப்பட்டோர் அக்கிரமம் இழைக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதால் (தற்காப்புப் போருக்கு) அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு உதவ ஏக இறைவனே ஆற்றல் மிக்கவன்.” (காண்க: திருக்குர்ஆன் 22:39)

பத்ரு எனும் இடத்தில் வெறும் 313 முதல் 320 நபர்களுடன் இறைத் தூதர் முஹம்மத்(ஸல்) அப்படையை எதிர்கொண்டு போரிட் டார்கள். இறைநம்பிக்கையாளர்களுக்கு இறைவன் வெற்றியைக் கொடுத்தான். மக்காவில் இறைநம்பிக்கையாளர்களைக் கொடுமைப் படுத்திய பலர் இப்போரில் மாண்டனர்.

சிறிது காலத்திற்குப் பின்னர் மக்காவாழ் இறைமறுப்பாளர்கள் மீண்டும் போர் தொடுத்தார்கள். அந்தப் போர் மதீனாவின் எல்லைப் பகுதிக்கு அப்பால் மதீனா நகருக்கு அடுத்துள்ள உஹுத் எனும் மலையடிவாரத்தில் நடந்தது. ஆரம்பத்தில் மதீனா இராணுவத்திற்கு வெற்றி கிடைத்தது. இடையில் சற்று கவன மின்மை யால் மதீனா இராணுவம் கடுமையான இழப்பிற்கு உள்ளானது. இறுதியில் மதீனாவின் இஸ்லாமிய இராணுவத்திற்கே வெற்றி கிடைத்தது. எதிரிப்படைகள் பின்வாங்கி ஓடின.

இந்தப்போரில், மதீனாவில் வாழ்ந்த யூதர்களும், நயவஞ்சகர்களும் தேசத்தின் பாதுகாப்புச் சட்டங்களை மீறி மதீனா இராணுவத்திற்கு எதிராய் எதிரிப் படைக்கு உதவினார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மீது தொடர்ந்து பல போர்கள் திணிக்கப்பட்டன. இவற்றில் அகழ்ப்போர் குறிப்பிடத் தக்கது.

மதீனாவின் இஸ்லாமிய அரசை அழிப்பதற்காக யூதர்களையும்

உள்ளடக்கிய பத்தாயிரம் பேர் கொண்ட படை ஒன்று விரைந்தது. அது மதீனாவை முற்றுகையிட்டது. அப்போது ஸல்மான் ஃபார்ஸி(ரலி) அவர்களின் ஆலோசனைப்படி மதீனாவைச் சுற்றி அகழ் தோண்டினார்கள். இதனால் எதிரிப்படை ஒரு மாதகாலம் முற்றுகைக்குப் பின்னர் எவ்விதப் பலனின்றி திரும்பினார்கள்.

## ஹுதைப்பிய்யா உடன்படிக்கை

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் மதீனா தேசத்தின் அதிபர் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும், இதுவரை அவர்களுக்கு எதிராக போரிட்ட மக்கா தேச இறைமறுப்பாளர்களுக்கும் இடையில் 'ஹுதைப்பிய்யா' என்னும் இடத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது.

இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராகவே அமைந்திருந்தன. இருப்பினும் இறைவனின் கட்டளைப் படி அவற்றை இறைத்தூதர்(ஸல்) ஒப்புக்கொண்டார்கள். இது வரையில் தோல்வியைத் தழுவியிராத ஒரு தளபதி போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தது உலக வரலாற்றில் இதுவே முதல் முறை எனலாம்.

## நிபந்தனைகள்

- "பத்தாண்டுகளுக்குப் போர் நிறுத்தி வைக்கப்படுகிறது."
- "முஹம்மத் அவர்களோடு ஒப்பந்த உறவுகளை வைத்துக் கொள்ள விரும்புவோர் அவ்வாறு செய்து கொள்ளலாம். அதுபோன்றே மக்காவாசிகளோடு அப்படிப்பட்ட உறவுகளை வைத்துக்கொள்ள விரும்புவோர் அவ்வாறு செய்து கொள்ளலாம். இதற்கு முழுச்சுதந்திரம் உண்டு."
- "ஒரு நபர் அவரின் பொறுப்பாளரின் அனுமதியின்றி முஹம்மத் அவர்களிடம் செல்வாரானால் அவர் தன் பொறுப் பாளரிடமே திருப்பி அனுப்பப்படுவார். ஆனால், முஹம்மத் அவர்களைப் பின்பற்றுவோர் யாரேனும் மக்காவாசிகளிடம் வந்துவிட்டால் அவர் (மதீனாவிற்குத்) திருப்பி அனுப்பப்படமாட்டார்."

இந்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் மக்காவாசிகள் மதீனாவிற்கும் மதீனாவாசிகள் மக்காவிற்கும் வந்து செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் முஸ்லிம்களின் கட்டுப்பாடும் செயல்பாடுகளும் மக்காவாசிகளுக்குத் தெரிவந்தது. இஸ்லாமிய வளர்ச்சிக்கு இது ஒரு திருப்புமுனையாய் அமைந்தது.

சொல்லிக் கொண்டே இருப்பதைவிட தாம் சொல்வதை ஒரு சமூகம் செயல்படுத்திக் காண்பிக்கும்போது ஏற்படும் மாற்றத்திற்கு இது ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

## மன்னர்களுக்கு அழைப்பு

'ஹுதய்பிய்யா' உடன்படிக்கைக்குப் பின்னர் இறைத்தூதர்(ஸல்) அன்றைய வல்லரசுகளுக்கு இஸ்லாமின்பால் அழைப்பு விடுத்தார்கள். தம் நாட்டுத் தூதர்களின் மூலம் இறைத்தூதைக் கடிதமாகக் கொண்டு சென்றார்கள்.

**அக்கடிதத்தின் இறுதியில்,**

"வேதக்காரர்களே! நாம் ஏக இறைவனைத் தவிர வேறு எதையும் வணங்கமாட்டோம். அவனுக்கு எதையும் இணைவைக்க மாட்டோம். ஏக இறைவனை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுள்களாக எடுக்க மாட்டோம் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பொதுவான வாக்கியத்தின்பால் வாருங்கள்!" (காண்க: திருக்குர்ஆன் 3:64) எனும் வசனம் இணைக்கப்பட்டிருந்தது. இது ஒரு பொதுவான அழைப்பாய் இருந்தது.

## ஒப்பந்தம் முறிதல்

'ஹுதய்பிய்யா' ஒப்பந்தம் கையெழுத்தாகி இரண்டே ஆண்டுகளில் மக்காவின் இறைமறுப்பாளர்கள் பல முறை அந்த ஒப்பந்தத்தை மீறினார்கள். இறுதியாக மதீனாவைச் சார்ந்தோரின் பல உயிர்ச் சேதங்களுக்குப் பின்னர் மக்காவின் மீது போர்தொடுக்கும் கட்டாயத்திற்கு இறைத்தூதர்(ஸல்) தள்ளப்பட்டார்கள். பத்தாயிரம் பேர்கொண்ட படையுடன் மக்கா நோக்கிப் புறப்பட்டார்கள். யுத்தமின்றி மக்கா கைப்பற்றப்பட்டது. மனிதகுல வரலாற்றில் ஒரு தேசம் அமைதி யாகக் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

இறைத்தூதர்(ஸல்) உயிராய் நேசித்த அவர்களின் தோழர்களைக் கடுமையாகக் கொடுமைப்படுத்தி கொலை செய்த அனைவருக்கும் அன்று பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. குறிப்பாக இறைத் தூதரின் பால்குடிச் சகோதரரும், நெருங்கிய நண்பரும், சிறிய தந்தையுமான ஹம்ஜா(ரலி) அவர்களைக் கொன்று, ஈரலைக் கடித்துத் துப்பிய ஹிந்தா என்ற பெண்மணிக்கும், அவரின் அடிமை வஹ்ஷி என்பவருக்கும்கூட மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஏக இறைவனை மட்டும் வணங்கவேண்டிய இறைஇல்லம் சிலைகளால் களங்கப்படுத்தப்பட்டிருந்தது. இறைத்தூதர்(ஸல்) எல்லாச் சிலைகளையும் அகற்றினார்கள். மக்காவைச் சுற்றி இருந்த அனைத்துச் சிலைகளையும் அகற்றினார்கள்.

சத்தியம் வந்தது அசத்தியும் அழிந்தது அசத்தியம் அழியக் கூடியதே! (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 1664, 4287)

அடிமையாய் இருந்து இஸ்லாமை ஏற்ற பிலால்(ரலி) அவர்களுக்கு மாபெரும் பொறுப்பு ஒன்றை இறைத்தூதர்(ஸல்) கொடுத்தார்கள். அது பாங்கு என்னும் தொழுகைக்காக மக்களை அழைக்கும் பொறுப்பாகும். இந்தப்பொறுப்பை நிறைவேற்றியவர் மறுமையில் சிறப்பு மிக்கவராக கழுத்து உயரமாக்கப்பட்டு மக்களில் உயர்ந்தவராய் இருப்பார். நீண்ட இடைவேளைக்குப்பின் கஅபாவில் ஏகத்துவம் மிளிர்ந்தது.

இம்மாபெரும் வெற்றிக்குப் பின்னரும் இறைத்தூதர்(ஸல்) இறைவனின் கட்டளைக்கிணங்க மதீனாவிற்கே திரும்பினார்கள். இதன் பின்னர்தான் ஏகத்துவ ஒளி முழு அரபகத்திலும் மிளிரத் தொடங்கியது.

பிலால்(ரலி) அவர்களின் கையில் மதீனா தேசத்தின் நிதித் துறையும் கொடுக்கப்பட்டிருந்தது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுடன் இருந்து நிதித்துறை நிர்வாகமும் அவர்கள் செய்து வந்தார்கள். அடிமைகள் ஆளப்படுபவர்கள்; அவர்கள் ஆளும் வர்க்கமாக வரவேகூடாது என்ற வர்க்கபேதம் உடைக்கப்பட்டது. அன்று அரபுலகில் அடிமைகளாய் இருந்த பலர் இன்று அதே அரபுலகில் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்துள்ளார்கள் என்பது உலகம் அறிந்துள்ள உண்மை.

## குடும்ப வாழ்க்கை

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தங்களின் கடினமான அரசியல் வாழ்க்கைக்கு இடையில் சிறந்த குடும்பத் தலைவராகவும் திகழ்ந் துள்ளார்கள். அவர்களுக்கு இணையான குடும்பத் தலைவரைப் பார்க்கமுடியாது. குடும்ப அமைப்பு குறித்த அவர்களின் அறிவுரையும் ஈடு இணையற்றது. குடும்பத்தில் சிறந்த தலைவராய் இருப்பவரே சமூகத்தின் தேசத்தின் சிறந்த தலைவராய் இருக்க முடியும். குடும்ப நிர்வாகமே தெரியாதவருக்கு நாட்டு நிர்வாகம் சரிவர எப்படித் தெரிந்திருக்க முடியும்? தானும் நல்வழி நடந்து தம் மனைவி மற்றும் பிள்ளைகளை நல்வழி நடுத்துபவரால்

உறுதியாக தேசத்தையும் நல்வழியில் நடத்த முடியும். இதையும் குறிக்கும் விதத்தில்தான், "...தங்கள் மனைவியரிடம் (குடும்பத்தாரிடம்) சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள். (காண்க: திர்மிதீ 1172)

இறைத்தூதர்(ஸல்) தம் இளமைக் காலம் முழுவதையும் தம்மைவிட பதினைந்து வயது மூத்தவரான கதீஜா(ரலி) அவர் களுடன் கழித்தார்கள். அவர்கள் சிறந்த குடும்பத்தலைவர் என்பதை அறிந்து இருந்ததால் அன்னை கதீஜாவின் மரணத்திற்குப் பின்னர் இறைத் தூதரின் உற்ற நண்பர்களான அபூ பக்ர், உமர்(ரலி) ஆகியோர் தம் புதல்வியை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

தம்மைவிட வயதில் மூத்தவரான கதீஜா(ரலி) அவர்களுடனும், தம்மைவிட மிகச்சிறுவயதுடைய ஆயிஷா(ரலி) அவர்களுடனும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள்.

இறைத்தூதர்(ஸல்) திருமணம் செய்த பெண்களில் ஆயிஷாவைத் தவிர அனைவரும் விதவைகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் முதல் மனைவி கதீஜா(ரலி) அவர்களும் விதவை என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

இஸ்லாமிய வாழ்க்கைநெறி மனித குலத்திற்கு வெளிச்சமாகும் பொருட்டு இறைத்தூதர்(ஸல்) அவர்களின் இல்லற வாழ்க்கையும் ஒளிவுமறைவின்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தனிப்பட்ட, சமூக, அரசியல் வாழ்க்கை என ஒவ்வொன்றும் மனித குலம் முழுமைக்கும் ஒரு முன்மாதிரியாய் அமைந்துள்ளது. இதையே திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

இறைத்தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது. (காண்க: திருக்குர்ஆன் 33:21)

குடும்ப வாழ்க்கையில் நிகழ்ந்துள்ள அந்த அழகிய முன்மாதிரிகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

அறிவியல் முன்னேற்றம் பெற்றுள்ள இக்காலத்தில் பெண்களும் கற்றுத்தேர்ச்சி பெற்றிருந்தும்கூட அடிமைகள் போல பலபெண்கள் இன்றும் நடத்தப்படுகிறார்கள். தன் மனைவியுடன் சமமாய் அமர்ந்து உண்பதில்கூட ஏற்றத் தாழ்வை ஆண்வர்க்கம் பார்க்கிறது. கணவன் சாப்பிட்ட மீதம் வைத்ததை மனைவி சாப்பிட வேண்டுமாம். ஆனால், மனைவி எச்சில் பட்டதை கணவன் சாப்பிடுவது அவமானமாம்.

ஒரு தேசத்தின் அதிபர், இறைவனின் தூதர், இராணுவத் தளபதி என பல்வேறு பொறுப்புகள் வகித்த முஹம்மத்(ஸல்), தம் மனைவிக்கு சாப்பாடு ஊட்டிவிடுவதையும், தம் மனைவி சாப்பிட்டு எச்சிலைத்துக் கொடுத்ததையும் தாம் உண்பதையும் அன்பின் வெளிப்பாடு எனவும், இது தர்மம் செய்வதற்கு நிகர் எனவும் குறிப்பிட்டு, தம் தோழர்களும் அவ்வாறு வாழவேண்டும் என அறிவுரை கூறிவந்தார்கள்.

தம் மனைவியின் ஆலோசனை சிறந்தாகவே இருப்பனும் ஒரு பொம்பள சொல்லைக் கேட்பதா எனக் கர்வத்துடன் பேசுவோர் இன்றும் இருக்கிறார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் மனைவியரின் சிறந்த ஆலோசனைகளை நிராகரித்ததில்லை.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது இறைத்தூதர்(ஸல்) ஒப்பந்தப் பத்திரத்தை எழுதி முடித்த பின்பு தம் தோழர்களை நோக்கி, 'எழுந்து சென்று குர்பானி கொடுத்துவிட்டு தலைமுடி களைந்து கொள்ளுங்கள்'' என உத்தரவிட்டார்கள். ஆனால், அவர்களில் ஒருவர்கூட எழுந்திருக்கவில்லை. இறைத்தூதர்(ஸல்) மும்முறை கூறினார்கள். இருந்தும், அவர்களில் எவரும் எழுந்திருக்கவில்லை.

இறைத்தூதர்(ஸல்) தம் மனைவி உம்மு ஸலமா(ரலி) அவர்களிடம் சென்று மக்களிடமிருந்து தாம் சந்தித்த அதிருப்தியைச் சொன்னார்கள்.

“இறைத்தூதர் அவர்களே! தியாகப் பிராணியை அறுத்து விட்டுத் தலைமுடி களைந்து கொள்ள வேண்டும் என்பதை விரும்புகிறீர்களா? குர்பானி ஒட்டகங்களை நீங்கள் அறுத்துவிட்டு உங்கள் நாவிதரை அழைத்து, அவர் உங்கள் முடியைக் களைந்திடும் வரை அவர்களில் எவருடனும் ஒரு வார்த்தையும் பேசாதீர்” என உம்மு ஸலமா(ரலி) கூறினார்

இறைத்தூதர்(ஸல்) சென்று ஒட்டகங்களை குர்பானி கொடுத்து விட்டு, தம் நாவிதரை அழைத்துத் தலைமுடியைக் களைந்தார்கள். அதுவரை அவர்களில் எவரிடமும் இறைத்தூதர்(ஸல்) பேச வில்லை. இவற்றைக் கண்டவுடன் நபித்தோழர்களும் எழுந்து சென்று தியாகப் பிராணிகளை அறுத்து, ஒருவர் மற்றவரின் தலைமுடியைக் களையத் தொடங்கினர். ஒருவர் மற்றவரை நெரிசலால் சாகடித்து விடுவார்களோ எனும் அளவிற்குப் போட்டி

போட்டுக் கொண்டு (பலிப்பிராணிகளை அறுக்கவும் முடிகளைக் களையவும்) சென்றனர். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 2732)

வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவி செய்வதைக் கேவளமாகக் காண்போர்தான் அதிகம். உண்மையில் மனைவியை வேலைவாங்கிக் கொடுமைப்படுத்துவதுதான் கேவளம். ஆனால், இது யாருக்குத் தான் புரிகிறது.

அஸ்வத்(ரஹ்) அறிவித்தார்: “இறைத்தூதர்(ஸல்) தங்களின் வீட்டில் என்ன செய்வார்கள்?” என ஆயிஷா(ரலி) அவர்களிடம் நான் கேட்டேன்.

“தம் குடும்பத்திற்கு வீட்டு வேலைகளில் ஒத்துழைத்து வந்தார்கள்; தொழுகை நேரம் வந்தால் தொழுகைக்காக வெளியேறுவார்கள்” என ஆயிஷா(ரலி) கூறினார். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 676)

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் மனைவியருக்கு வீட்டு வேலைகளில் உதவி வந்தார்கள். பல பணிச்சுமைகளுக்கு மத்தியில் இப்படி மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய உரிமையில் குறைவைக்காமல் வாழ்ந்து வழிகாட்டிய ஒரு தேசத்தின் அதிபர் முஹம்மத்(ஸல்).

## இறுதி நாள்கள்...

மதீனாவில் இஸ்லாமிய அரசை நிறுவியதோடு இறைத்தூதர் (ஸல்) அனுப்பட்ட நோக்கம் பெருமளவு நிறைவேறியது. ஹிஜ்ரி பத்தாவது ஆண்டு (கி.பி. ஏழாம் நூற்றாண்டில்) இறைத்தூதரின் வாழ்க்கை இறுதி நாள்களை நோக்கி நகர்ந்தது. இஸ்லாமின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜை நிறைவேற்று வதற்காக இறைத்தூதர்(ஸல்) மக்காவிற்கு வந்தார்கள். மக்காவின் அரஃபா மற்றும் மினா மைதானங்களில் மக்களிடையே உரை நிகழ்த் தினார்கள். மனித குலம் முழுமைக்கும் உலகின் இறுதிநாள் வரை மாற்றியமைக்க முடியாத உரிமைப் பிரகடனமாய் அவ்வுரை அமைந்தது. அப்பிரகடனம் அரஃபா மற்றும் மினா ஆகிய இருண்டு பெருவெளிகளில் நடந்திருப்பினும் இதை அரஃபா உரை எனக் குறிப்பிடுகிறார்கள்.

## அரஃபா உரை

புகழனைத்தும் ஏக இறைவனுக்கே! அவனைப் புகழ்கிறோம்; அவனிடமே உதவி தேடுகிறோம்; அவனிடமே பாவமன்னிப்புக்

*கோருகிறோம். நம் மனோ இச்சைகளின் கெடுதியைவிட்டும், நம் செயல்களின் தீங்கைவிட்டும் அவனிடமே காவல் தேடுகிறோம். யாருக்கு ஏக இறைவன் நேர்வழி காட்டியுள்ளானோ அவரை வழிகெடுப்பவர் யாருமிலர்; யாரை அவன் வழிகெடுத்து விட்டானோ அவருக்கு நேர்வழி காட்டுபவர் யாருமிலர். ஏக இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணை ஏதுமில்லை என நான் சாட்சியளிக்கிறேன். முஹம்மத் அவனுடைய அடியாரும் தூதருமாய் இருக்கிறார் என்றும் நான் சாட்சியளிக்கிறேன். (காண்க: அல் பிதாயா - இப்னு கஸீர் 5/189)*

*மக்களே! என் பேச்சைக் கவனமாகக் கேளுங்கள்! இவ்வாண்டிற்குப் பின்பு மீண்டும் உங்களை இந்த இடத்தில் நான் சந்திப்பேனா என்பது எனக்குத் தெரியாது. (காண்க: இப்னு மாஜா 1892,1893)*

*மக்களே உங்களின் இறைவன் ஒருவனே! ஓர் அரபிக்கு அரபி அல்லாத ஒருவரைவிடவோ, அரபி அல்லாத ஒருவருக்கு ஓர் அரபியை விடவோ மேன்மையோ சிறப்போ இல்லை. ஒரு வெள்ளையருக்கு ஒரு கருப்பரை விடவோ, ஒரு கருப்பருக்கு வெள்ளையரை விடவோ சிறப்பேதும் இல்லை. இறையச்சமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக ஏக இறைவனிடம் உங்களில் மிகச் சிறந்தவர் உங்களில் இறையச்சம் அதிகமாய் உள்ளவரே. (காண்க: அஸ் ஸில்லதுஸ் ஸஹீஹா 2700, அத் தர்கீப் வத் தர்ஹீப் 2963, பைஹகீ)*

*மக்களே ஏக இறைவனை அஞ்சுங்கள்! அடிமையான கருப்பர் ஒருவர் உங்களுக்கு தலைவராய் ஆக்கப்பட்டாலும், அவர் இறை வேதத்தைக் கொண்டு உங்களை வழிநடத்தி அதை உங்களுக் கிடையில் நிலைநிறுத்தும் காலம் வரை அவருக்கு செவிசாயுங்கள்; கீழ்படியுங்கள். (காண்க: நஸாயீ 4192, திர்மிதீ 1706)*

*மக்களே! இந்த (துல்ஹஜ்) மாதமும், இந்த நாளும் (துல்ஹஜ் 9, 10ஆம் நாளும்) இந்த நகரமும் (மக்கா நகரமும்) எந்த அளவிற்குப் புனிதமானவையோ அதே அளவிற்கு உங்கள் உயிர்களும், உடமை யும், மானமும், மரியாதையும் உங்களுக்குப் புனிதமானவையே. (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 1741, 1742. ஸஹீஹ் முஸ்லிம் 2334)*

*அறிந்து கொள்ளுங்கள்! எனக்குப் பின்பு ஒருவரையொருவர் கழுத்தை வெட்டிக் கொண்டு வழிகெட்டவர்களாய் இறைமறுப் பாளர்களாக மாறிவிடாதீர்கள்.*

*உங்களின் இறைவனை நீங்கள் சந்திக்கும் வரை (நீதியில் நிலைத் திருங்கள்). நீங்கள் அனைவரும் இறைவனின் முன்னிலையில் ஒன்று சேர்க்கப்படுவீர்கள். அப்போது உங்களின் செயல்கள் குறித்து இறைவன் விசாரிப்பான். மார்க்கத்தைத் தெளிவாக உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டேன். உங்களில் ஒருவர் பிறரின் பொருளுக்குப் பொறுப்பேற்றிருந்தால் அதன் உரிமையாளரிடம் உரிய முறையில் ஒப்படைத்துவிடட்டும்.(காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 4406)*

*மக்களே! முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! உங்களின் அடிமைகள் விஷயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள். அவர்களைச் சீராகப் பராமரியுங்கள். நீங்கள் உண்பதுபோல அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவது போல அவர்களுக்கும் உடுத்தக் கொடுங்கள்.*

*குறைஷிகளே! மறுமைக்கான தயாரிப்புடன் நாளை மக்கள் வரும்போது, உலகச் சுமைகளை உங்களின் பிடரியின் மீது சுமந்தவர்களாய் வராதீர்கள். அப்போது எந்த விஷயத்திலும் இறைவன் புறத்திலிருந்து உங்களுக்கு பாதுகாப்பு அளிப்பவனாக நான் இருக்கமாட்டேன்.*

*அறியாமைக் கால விவகாரங்கள் அனைத்தும் என் கால்களுக்குக் கீழே புதைக்கப்பட்டுவிட்டன. அறியாமைக் காலத்தில் நிகழ்ந்த கொலைகளுக்குப் பழிவாங்குதல் அனைத்தும் ரத்துச்செய்யப் பட்டுவிட்டன. நம்மிடைய நடந்த கொலைகளில் ரபீஆ இப்னி ஹாரிஸின் மகன் கொலை செய்யப்பட்டதற்கான பழிவாங்குதலை முதலில் நான் தள்ளுபடி செய்கிறேன். - பனூ ஸஅத் குலத்தாரிடம் அவன் பால்குடிச் சிறுவனாக இருந்துவந்தான். அவனை ஹுதைல் குலத்தார் கொன்றுவிட்டனர்- அறியாமைக் காலத்தில் இருந்த வட்டியும் என் பாதங்களுக்குக் கீழே புதைக்கப்படுகிறது. நம்மவர் கொடுத்திருந்த வட்டியில் அப்பாஸ் இப்னி அப்துல் முத்தலிப்புக் குரிய வட்டியை முதலாவதாக நான் தள்ளுபடி செய்கிறேன். அவருக்குரிய வட்டி அனைத்தும் அசலுடன் தள்ளுபடி செய்யப் படுகின்றன.(காண்க: ஸஹீஹ் முஸ்லிம் 2334. இப்னு மாஜா 3055. திர்மிதீ 3078)*

*மக்களே! சொத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவரின் உரிமையை இறைவன் வழங்கியுள்ளான். இனி எவரும் தன் வாரிசுகளுக்கு உயில் எழுதக்கூடாது.*

அறிந்து கெள்ளுங்கள்! குழந்தை விரிப்புக்கே சொந்த மானது.

திருமணத்திற்குப் பின்பு ஒரு பெண் விபச்சாரம் செய்து அதன் மூலம் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை திருமணம் முடித்துள்ள ஆணுக்கே உரியதாகும்.

திருமணத்திற்குப் பிறகும் விபச்சாரத்தில் ஈடுபடுபவர் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும்.

தந்தை அல்லாத ஒருவரை தம் தந்தையாக அழைப்பவரின் மீதும், தம் எஜமானனுடன் தன்னை இணைத்துக் கொண்டவரின் மீதும் ஏக இறைவன், வானவர்கள் மற்றும் மக்கள் அனைவரின் சாபமும் உண்டாகட்டும். அவர்களின் கடமையான உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படாது. (காண்க: நஸாயீ 3642, அபூ தாவூத் 2870)

ஒரு பெண் கணவனின் வீட்டிலிருந்து அவனுடைய அனுமதி இல்லாமல் எதையும் செலவிடக்கூடாது.

“உணவையுமா” என அப்போது கேட்கப்பட்டது.

“ஆம்! அதுதான் நம்முடைய செல்வங்களில் மிகச் சிறந்தது” என்று இறைத்தூதர்(ஸல்) பதிலளித்தார்கள். (காண்க: அபூ தாவூத் 3565)

இரவலாக வாங்கப்பட்ட பொருள் உரியவரிடமே ஒப்படைக்கப் படவேண்டும். பாலைக் கொண்டு பயன்பெற அளிக்கப்பட்ட கால்நடைகள் (பயன்பெற்றப்பின்னர்) உரிமையாளரிடமே திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இழப்பீடு நிறைவேற்றும் பொறுப்பு தலைவனையே சாரும். (காண்க: அபூ தாவூத் 3565. திர்மிதீ 2120)

மக்களே கவனியுங்கள்! பெண்கள் விஷயத்தில் ஏக இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நன்மையே நாடுங்கள். அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்! ஏக இறைவனின் அமானிதமாக அவர்களைப் பெற்றுள்ளீர்கள். உங்களின் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருப்பதுபோலவே உங்கள்மீதும் அவர்களுக்கு உரிமைகள் உள்ளன. நீங்கள் விரும்பாத வர்களை அவர்கள் உங்களின் வீடுகளுக்குள் அனுமதிக்காதிருப்பது அவர்களின் கடமையாகும். மானக்கேடான காரியங்கள் செய்யாமல் இருக்கவேண்டும். அவர்கள் குற்றம் இழைத்தால் அவர்களைத்

தண்டிக்கிற உரிமை உங்களுக்கு உண்டு. அதாவது அவர்களை உங்களின் படுக்கையைவிட்டு ஒதுக்கிவையுங்கள்! காயம் ஏற்படாத வகையில் இலேசாக அடியுங்கள்; அவர்கள் தங்களின் தவறிலிருந்து விலகிக் கொண்டால் அவர்களுக்கு முறையாக உணவும் உடையும் அளியுங்கள்! அவர்களுக்கு நன்மையையே நாடுங்கள்! ஏனெனில் உங்களிடம் உங்களின் உதவியாளர்களாகவும், உங்களையே சார்ந்தவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அதைத் தவிர (பாலுறவு கொள்வதைத் தவிர) வேறுஎதையும் உரிமையாகக் கொள்ளமாட்டீர்கள். ஏக இறைவனின் பெயரை முன்மொழிந்து அவர்களுடன் மணவாழ்க்கை ஒப்பந்தம் செய்துள்ளதை நினைவில் நிறுத்திக் கெள்ளுங்கள். (காண்க: ஸஹீஹ் முஸ்லிம் 2334. திர்மிதீ 1163, 3087)

மக்களே! நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். என் பேச்சைக் கவனமாகக் கேளுங்கள். என்னுடைய பிரச்சாரத்தை உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டேன். உங்களிடையே இறைவேதத்தையும், அவனுடைய தூதரின் வழிமுறையையும் விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பின்பற்றினால் வழிதவறமாட்டீர்கள். (காண்க: ஸஹீஹ் முஸ்லிம் 2334. இப்னு மாஜா 3074)

மக்களே! உங்களின் இந் நகரத்தில், தான் வணங்கப்படுவது குறித்து ஷைத்தான் நம்பிக்கை இழந்துவிட்டான். இருப்பினும் அவன் மகிழும் விதமாக அற்பமாக நீங்கள் கருதும் சில விஷயங்களில் அவனுக்குக் கீழ்ப்படிவீர்கள். எனவே உங்களின் மார்க்க விஷயத்தில் அவனிடம் எச்சரிக்கையாய் இருங்கள். (காண்க: முஸ்தத்ரக் அல் ஹாகிம்)

(பிற்காலத்தில் தோன்றும் பெரும் பொய்யன்) அல் மஸீஹுத் தஜ்ஜால் குறித்து எச்சரிக்கிறேன். இறைவன் அனுப்பிய இறைத் தூதர்களில் எவரும் தம் சமுதாயத்தாரை தஜ்ஜால் குறித்து எச்சரிக்காமல் இருந்ததில்லை. இறைத்தூதர் நூஹ்(அலை) அவனைப் பற்றி எச்சரித்தார்கள். அவர்களுக்குப் பின்னால் வந்த இறைத்தூதர்களும் (அவனைக் குறித்து) எச்சரித்தார்கள்.

அவன் (இறுதிகாலத்தில்) தோன்றுவான். அவன் தன்மைகளில் ஏதேனும் சில உங்களுக்குப் புலப்படாமல் போனாலும், உங்களின் இறைவன் உங்களுக்குத் தெரியாதவனல்ல என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இதை மும்முறை கூறினார்கள். உங்களின் இறைவன் ஒற்றைக் கண்ணன் அல்ல. அவனோ (தஜ்ஜாலோ)

*வலக்கண் குருடானவன். அவன் கண் (ஒரே குலையில்) துருத்திக் கொண்டிருக்கும் திராட்சையைப்போல இருக்கும். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 4402)*

*(மாதத்தின் நாள்களை ஒவ்வொருவரும் தங்களின் விருப்பத்திற்கு) முன்பின் ஆக்குதல் இறைமறுப்பை அதிகரிக்கும் செயலாகும். இதனால் இறைமறுப்பாளர்களே வழிகெடுக்கப்படுகிறார்கள். அவர்களே ஒரு மாதத்தின் நாள்களை முன்பின் ஆக்கி ஓர் ஆண்டில் அம்மாதங்களில் போரிடுவதை ஆகுமாக்கிக் கொள்கிறார்கள். மற்றோர் ஆண்டில் அதே மாதத்தில் போரிடுவது கூடாது என தடுத்துக் கொள்கிறார்கள். தாங்கள் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கையை இறைவன் தடுத்துள்ள மாதங்களின் எண்ணிக் கைக்கு சரியாய் ஆக்கி இறைவன் தடுத்திருக்கும் மாதங்களையும் தாங்கள் ஆகுமானதாய் ஆக்கிக் கொள்வதற்காகத்தான் இவ்வாறு செய்கிறார்கள். (காண்க: இப்னு மாஜா 3055)*

*அறிந்து கொள்ளுங்கள்! வானங்களையும் பூமியையும் இறைவன் படைத்த நாளிலிருந்தே அதன் அமைப்புப்படி இப்போதும் காலம் சுற்றிவருகிறது. ஏக இறைவனிடம் மாதங்களின் எண்ணிக்கை பனிரெண்டாகும். வானங்களையும் பூமியையும் இறைவன் படைத்த அன்று இவ்வாறுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. அவை துல் கஅதா, துல் ஹஜ் மற்றும் முஹர்ரம். நான்காவது ரஜப் மாதமாகும். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 4662. அபூ தாவூத் 1942)*

*ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! மனமுவந்து கொடுத்தால் தவிர, ஒரு முஸ்லிமின் பொருள் மற்றொரு முஸ்லிமுக்கு ஆகுமானதன்று. உங்களுக்கே நீங்கள் அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள். (காண்க: திர்மிதீ 3078.)*

*மக்களே! உங்களின் இறைவனை வணங்குங்கள்! அவனையே அஞ்சுங்கள்! கடமையான ஐவேளைத் தொழுகையைத் தவறாது பேணுங்கள்! நோன்பு நோற்றுவாருங்கள்! மனமுவந்து ஸகாத் கொடுத்துவாருங்கள்! இறைஇல்லத்தை (கஅபாவை) ஹஜ் செய்யுங்கள்! உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்குக் கட்டுப் படுங்கள்! (அப்போதுதான்) நீங்கள் சுவர்க்கம் செல்வீர்கள். (காண்க: திர்மிதீ 616)*

ஒருவர் குற்றமிழைத்தால் அதற்கான தண்டனை அவருக்கே கொடுக் கப்படும். மகனின் குற்றத்திற்காக தந்தையோ, தந்தையின் குற்றத்திற் காக மகனோ தண்டிக்கப்பட மாட்டார். (காண்க: ஜாமிவுத் திர்மிதீ 2159, 3078 இப்னு மாஜா 1015)

என் பிரார்த்தனையைத் தவிர இறைத்தூதர் ஒவ்வொருவரின் பிரார்த்தனையும் (உலகிலேயே) முடிந்துவிட்டது. மறுமை நாளுக்கு அதை நான் என் இறைவனிடம் சேமித்து வைத்துள்ளேன். அறிந்து கொள்ளுங்கள்! மறுமையில் இறைத்தூதர்கள் தங்களின் சமுதாயத்தினர் அதிகமாக இருப்பதைக் கண்டு மகிழ்வார்கள். அப்போது என்னைக் கேவலப்படுத்திவிடாதீர்கள்! நான் உங்களுக் காக கவ்ஸர் எனும் நீர்தடாகத்தின் அருகில் அமர்ந்திருப்பேன்.

மக்களே! எனக்குப் பின்னர் எந்த இறைத்தூதருமிலர். உங்களுக்குப் பின்னர் எந்தச் சமுதாயமும் இல்லை. இங்கு வந்திருப்பவர்கள் வராதிருப்பவர்களுக்கு (இச்செய்தியை) எட்டச் செய்யுங்கள்! செய்தி சென்று சேர்பவர்களில் சிலர் நேரடியாகக் கேட்பவரை விட நன்றாய் ஆராயும் தன்மை கொண்டவராய் இருக்கலாம். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 67, 105, 1741)

இவ்வாறு இறைத்தூதர்(ஸல்) உரை நிகழ்த்திவிட்டு மக்களை நோக்கி,

“மறுமை நாளில் என்னைப் பற்றி உங்களிடம் விசாரிக்கப்படும் போது என்ன சொல்வீர்கள்?” எனக் கேட்டார்கள்.

“(இறைச்செய்திகள்) அனைத்தையும் தெரிவித்துவிட்டீர்கள்; தங்களின் பொறுப்பை தாங்கள் நிறைவேற்றிவிட்டீர்கள்; நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியளிப்போம்” என மக்கள் கூறினார்கள்.

அப்போது இறைத்தூதர்(ஸல்) தம் ஆட்காட்டி விரலை வானத்தின் பால் உயர்த்தி சைகை செய்து பின்னர் மக்களின் பால் தாழ்த்தி, “இறைவா இதற்கு நீயே சாட்சி” எனக்கூறி தங்களின் அரஃபா உரையை நிறைவு செய்தார்கள். (காண்க: ஸஹீஹ் முஸ்லிம் 2334)

இவ்வாறு அவர்கள் உரை நிகழ்த்திய இடத்தில் திருக் குர்ஆனின் 5:3 வசனம் அருளப்பட்டது.

இன்று உங்களுக்காக உங்களின் மார்க்கத்தைப் பூர்த்தியாக்கி விட்டேன். உங்கள்மீது என் அருட்கொடையையும் பூர்த்தி ஆக்கி

விட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ்லாமை உங்களின் மார்க்கமாகத் தேர்ந்தெடுத் துள்ளேன். (காண்க: திருக்குர்ஆன் 5:3, மேலும் ஸஹீஹ் அல் புகாரீ 4406, 4407)

## மரணம்...

இறைத்தூதர்(ஸல்) தம் அறுபத்தி மூன்றாம் வயதில் நோய்வாய்ப் பட்டு மரணித்தார்கள். மதீனாவின் மஸ்ஜிதுன் னபவிக்கு அடுத்தாற் போல அமைந்திருந்த தம் இல்லத்திலேயே அடக்கம் செய்யப் பட்டார்கள். அவர்கள் தங்களின் இல்லத்தாருக்கு விட்டுச் சென்ற சொத்து மிகச்சொற்பமானது. அப்போது அவர்களின் போர்கவசம் ஒன்று இஸ்லாமிய அரசின் குடிமகனான ஒரு யூதரிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களின் “இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை” என்னும் புரட்சித்தூது உலக இறுதிநாள் வரை நிலைத்திருப்பதாகும். இதுதான் இஸ்லாமின் அடிப்படை.

“என் நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களின் நிலையும் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவிற்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒருவரின் நிலைபோன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

‘‘இச்செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?’ எனக் கேட்டார்கள்.

நானே அச்செங்கல். மேலும், நானே இறைத்தூதர்களில் இறுதி யானவன்’ என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்’’ என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். (காண்க: ஸஹீஹ் அல் புகாரீ 3535)

அந்த இறுதித்தூதரின் வழிநடக்கும் சமுதாயம் உலகில் ஒப்பற்ற சமுதாயமாய்த் திகழும் என்பது உறுதி. இப்படிப்பட்ட சமுதாயத்தின் அங்கமாவதற்கு நீங்களும் முயலுங்கள். உங்கள் முயற்சியை இறைவன் உங்களுக்குப் பயனுள்ளதாய் ஆக்கட்டும்!

*******

## அரபுலக அதிபர், இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) மரணித்தபோது அவர்களுடைய சொத்தின் மதிப்பு:

"என் வாரிசுகள் ஒரு தீனாரைக் கூடப் பங்காக (வாரிசு உரிமையாக) பெறமாட்டார்கள். என் மனைவிமார்களுக்குச் சேர வேண்டிய வாழ்க்கைச் செலவும் என் பிரதிநிதியின் ஊதியமும் போக நான் விட்டுச் செல்பவை எல்லாமே தர்மமாகும்"

**-இறைத்தூதர் முஹம்மத்(ஸல்)**

*அறிவித்தவர்: அபூ ஹுரைரா(ரலி),*
*நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3096*

இறைத்தூதர்(ஸல்) தம் ஆயுதத்தையும் தம் வெள்ளைக் கோவேறுக் கழுதையையும் தவிர வேறு எதையும் (மரணித்தபோது) விட்டுச் செல்லவில்லை. மேலும், அவர்கள் ஒரேயொரு நிலத்தை (மட்டும்) தர்மமாக விட்டுச் சென்றார்கள்.

*அறிவித்தவர்: அம்ர் இப்னு ஹாரிஸ்(ரலி)*
*நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3098*

*நிலைப் பேழையிலிருந்த சிறிது பார்லியைத் தவிர, உயிருள்ளவர் உண்ணக் கூடிய பொருள் எதுவும் என் வீட்டில் இல்லாத நிலையில் இறைத்தூதர்(ஸல்) மரணித்தார்கள். அதிலிருந்து எடுத்து நீண்ட காலம் நான் உண்டேன். பிறகு, அதை நான் அளந்தேன். அது தீர்ந்து போய்விட்டது.*

***-முஹம்மத்(ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா(ரலி)***

*நூல்: ஸஹீஹ் அல் புகாரீ 3097*

"உலக வரலாற்றில் செல்வாக்குள்ள நூறு
பேர்களில், முதல் நபராக நான் முஹம்மதைத்
தேர்வு செய்தது வாசகர்களுக்குக்
கேள்விகளையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தி
இருக்கலாம். ஆனால், வரலாற்றில் அவர் ஒருவர்
மட்டுமே, ஆன்மிகம் மற்றும் மதச்சார்பற்ற
நிலைகளில் வெற்றியைக் கண்டுள்ளார்."

வரலாற்று ஆசிரியர் மைக்கேல் எச். ஹார்ட்
அவர்கள் எழுதியுள்ள

# The 100


**IPRC - Islamic Publications & Research Centre**

Madurai, Tamil Nadu, India.
For Contact: +91 9364414441 E-mail: iprcindia2000@gmail.com